**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KILVELUR**

**CC. 248/2024**

LW5 PW3

| | | | |
|---|---|---|---|
| Name | உதயராஜா | | |
| Husband Name | கல்யாணசுந்தரம் | Calling | |
| Village | தேவூர் | Religion | |
| Taluk | | Age | 36 |

**Solemnly affirmed in accordance with the provision of Act I of 1872, Chapter X of the day of**

**05-02-2025**

**Both accused present.**

**முதல் விசாரணை**

நான் தற்போது தேவூரில் வசித்து டிரைவர் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1 ஐ தெரியும். அவர்களுக்கு இடையே மது சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். கடந்த 05.02.2024 அன்று கீவளூர் கடைத்தெருவில் சம்பவம் நடந்த இடத்தை போலீசார் பார்வையிட்டு வரைபடம் வரைந்தார்கள். நான் அங்கு தான் இருந்தேன். சாட்சியமாக என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். போட்டு கொடுத்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

பார்வை மகசரில என்ன எழுதியிருந்தது என்ற விபரம் தெரியுமா என்றால் சண்டை நடந்த இடத்தை வரைபடமாக வரைந்து கொண்டார்கள். போலீசார் கேட்டுக் கொண்டதற்காக கையொப்பம் போட்டு கொடுத்தேன் என்றால் நான் தான் சண்டை நடந்த இடத்தை காட்டினேன். அ.சா. 1 மற்றும் அ.சா. 2 என்னுடைய உறவினர்கள்

என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறனே் என்று சொன்னால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றும், சம்பவம் பற்றி எதுவும் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KILVELUR**

**CC. 248/2024**

LW2PW2

| Name | ரஜினி | | |
|---|---|---|---|
| Fathers Name | ஆறுமுகம் | Calling | |
| Village | தேவூர் | Religion | |
| Taluk | | Age | 38 |

**Solemnly affirmed in accordance with the provision of Act I of 1872, Chapter X of the day of**

**05-02-2025**

**Both accused present.**

**முதல் விசாரணை**

நான் தற்போது தேவூரில் வசித்து பிளம்பிங் வேலை செய்து வருகிறேன் ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா. 1 ஐ தெரியும். அ.சா.1 க்கும் எதிரிகளுக்கும் இடையே ஒயின் ஷாப்பில் தகராறு ஏற்பட்டது. அதை நான் தான் தடுக்க சென்றேன். அப்போது ஆஜர் எதிரிகள் இருவரும் கட்டையால் அ.சா.1 ஐ அடித்தார்கள். அதில் அ.சா. 1 ன் கன்னத்தில் இருந்து ரத்தம் வந்தது. ஆஜர் எதிரிகள் அ.சா. 1 ஐ குச்சிக்காரி மகனே தேவுடியா மகனே என்று ஆபாச வார்த்தைகளால் திட்டினார். உடனே அ.சா. 1 ஐ தேவூர் அரசு மருத்துவமனைக்கு இரு சக்கர வாகனத்தில் அனுப்பி வைத்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் என்னை ஒரு முறை விசாரித்தார்கள். அ.சா.1 என்னுடைய தம்பி முறை என்று சொன்னால் என் ஊரை சேர்ந்தவர். ஆஜர் எதிரிகளும் என் ஊரை சேர்ந்தவர்கள் என்று சொன்னால் சரிதான். அ.சா.1 க்கும் ஆஜர் எதிரிகளுக்கும்

இடையே ஏற்கெனவே ஒரு வழக்கு நிலுவையில் உள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த வழக்கில் ஆஜர் எதிரிகள் தான் புகார்தாரர்கள் என்று சொன்னால் சரிதான். 29.01.2024 அன்று இரவு 8 மணிக்கு சம்பவம் நடந்தது என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடந்த இடத்திற்கும் என் வீட்டிற்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 1 கிமீ தூரம் இருக்கும். அ.சா. 1 என்னுடைய தம்பி முறை என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா. 1 ஐ இரு சக்கர வாகனம் மூலமாக நான் மருத்துவமனைக்கு அனுப்பவில்லை என்றும், 108 ஆம்புலன்ஸ் மூலமாகத்தான் அனுப்பினார்கள் என்று கேட்டால் தேவூர் அரசு மருத்துவமனைக்கு இரு சக்கர வாகனம் மூலமாக அனுப்பினேன். அங்கிருந்து 108 ஆம்புலன்ஸ் மூலமாக அனுப்பினார்கள் . சம்பவத்திற்கும் ஆஜர் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், எதிரிகள் அ-சா.1ன் மீது தாக்கல் செய்த புகாரை திரும்ப பெற சொல்லி கூறியும் அவர்கள் பெறாததால், அ.சா.1 அவராக பிரச்சனையை ஏற்படுத்திக் கொண்டு அதில் தன்னிச்சையாக ஏற்பட்ட காயத்தினால் எதிரிகள் மீது பொய்யாக ஒரு வழக்கு தாக்கல் செய்து அதில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கு மது அருந்தும் பழக்கம் இல்லை என்றும் அவர் சம்பவ இடத்திற்கு சாமான்கள் வாங்கத்தான் வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல.